**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 733/2023**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதாகரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலுச்சாமி | தொழில் | : | உதவி காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தூத்துக்குடி | வயது | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 09th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 25.05.2018ம் தேதி, 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஆலங்குளம் காவல்நிலைய உதவி காவல் ஆய்வாளர் முகைதீன் அப்துல்காதர் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.305/2018, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி தூத்துக்குடி முதன்மை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru.Arumugaperumal, System Analysist ,முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி நீதிமன்றத்தில் இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.11 13:15:09 +0530